**வாக்குமூலம்**

**முதலாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், திருவள்ளூர்**

| | | |
|---|---|---|
| வழக்கு எண; | : | SC 309/2024 |
| வழக்கு சாட்சி | : | PW 11 |
| நாள் | : | 07.03.2026 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பழனி | ஜாதி | : | |
| தந்தை – பெயர் | : | வீரபத்திரன் | தொழில் | : | உதவி ஆணையாளர் ஆவடி |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுக்கா | : | | வயது | : | |

2ம் எதிரி ஆஜரில்லை. மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மற்ற எதிரிகள் ஆஜர்.

**<u>முதல் விசாரணை</u> :**

நான் தற்போது ஆவடி ஆணையரகத்தில் மத்திய குற்றப்பிரிவு காவல் உதவி ஆணையர் ஆக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 21.06.2018 அன்று இரவு காவல் உதவி ஆய்வாளர் முத்தமிழ் செல்வன் பணியில் இருந்த போது திருவள்ளூர் அரசு மருத்துவமனையில் இருந்த கிடைத்த தகவலை பெற்று மருத்துவமனை சென்று காயம்பட்ட நபர் ரவிகுமார் என்பவரிடம் விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து மறுநாள் 22.06.2018ம் தேதி காவல் உதவி ஆய்வாளர் முத்தமிழ் செல்வன் என்பவர் நிலையம் வந்து பட்டாபிராம் காவல் நிலைய குற்ற எண்.733/2018, பிரிவு 294(பி), 332 இதச r/w 3 of TNPPDL Act பிரிவின்படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார். அந்த முதல் தகவல் அறிக்கை **அ.த.சா.ஆ.7 ஆகும்.** அதன் பிறகு காவல் உதவியாளர் சம்பவ இடமான பி.டி.எம்.எஸ் மெயின் ரொடு வேக தடை அருகே சென்ற சம்பவ இடத்தை சாட்சிகள் கண்ணதாசன், மற்றும் துரைராஜ் ஆகியோர் முன்னிலையில் பார்வையிட்டு மாதிரி வரைப்படம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்தேன். அந்த மாதிரி வரைப்படம் **அ.த.சா.8 ஆகும்.** பார்வை மகஜர் **அ.த.சா.ஆ.9 ஆகும்.** மேற்படி சம்பவ இடத்தில் அதே சாட்சிகள் முன்னிலையில் உடைந்த கண்ணாடியின் துண்டுகள் சிறிதளவு கைப்பற்றினார். அந்த

கைப்பற்றுதல் மகஜர் **அ.த.சா.10 ஆகும்.** வழக்கு தடய சொத்துக்கள் அனைத்தையும் படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு உதவி ஆய்வாளர் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தார். நான் இந்த வழக்கின் தன்மையை கருதி எனது புலன் விசாரணைக்கு எடுத்து கொண்டு எதிரிகளை தேடிவந்த நிலையில் கடந்த 22.06.2018ம் தேதி எதிரி கரிகாலன், என்கிற மைகல் என்பவரை கைது செய்து சாட்சிகள் மனோகரன், மற்றும் கருணாகரன் ஆகியோர் முன்னிலையில் எதிரி தானாக முன் வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்தேன். அந்த ஒப்புதல் வாக்குமூலம் **அ.த.சா.11 ஆகும்.** பின்பு கரிகாலன், என்கிற மைகல் சம்பவம் இடத்தை காண்பித்தார். பின்பு 24.06.2018 அன்று 1ம் எதிரி கார்த்திகேயன், 2ம் எதிரி லோகேஷ், 3ம் எதிரி வசந்தகுமார் ஆகியோர்களை கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினேன். சாட்சிகள் ரவிகுமார், உமாபதி, ராஜேந்திரன், பார்த்த சாரதி, ரமேஷ்பாபு, கண்ணாதாசன், துரைராஜன், மனோகரன், கருணாகரன், பாலசுப்பிரமணியம், ஞானபிரகாசம், மருத்துவர் சாந்தினி, உதவி ஆய்வாளர் தமிழ்செல்வன் ஆகியோர்களை விசாரணை செய்தேன். பின்பு புலன் விசாரணையில் எதிரிகள் மீது பதியப்பட்ட குற்ற பிரிவினை பிரிவு 294பி, 332 இதசr/w 3(1) TNPPDL Act பிரிவிலிருந்து 294பி, 332, 341, 353, 34 IPC 3(1) TNPPDL Act–ல் பிரிவு மாற்றம் செய்தேன். அந்த பிரிவு மாற்றம் அறிக்கை **அ.த.சா.ஆ.12** ஆகும். பின்பு வழக்கின் விசாரணையை முடித்து சட்டவல்லுநர் அவர்களிடம் கருத்துரை பெற்று பிரிவு 294(பி), 332, இதச 3(1) TNPPDL Act–ல் காவல் ஆய்வாளர் திரு.தமிழ்வாணன் அவர்களால் இறுதி குற்ற அறிக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார்.

**குறுக்கு விசாரணை**

21.06.2018 அன்று சம்பவம் நடைபெற்றது என்றால் சரிதான். காவல் நிலையத்தில் தகவல் தெரிவித்தது அடுத்த நாள் மாலை 4.30 மணி என்றால் சரியல்ல. இந்த வழக்கில் புகார்தாரருக்கு சிறாய்ப்பு காயமோ, ரத்த காயமோ ஏற்படவில்லை என்றால் சரியல்ல. சம்பவ தேதியன்றே புகார்தாரர் இரவு 10.00 மணிக்கு மருத்துவமனைக்கு சென்றுள்ளார் என்றால் சரிதான். மருத்துவர்

புகார்தாரர் விசாரிக்கும் போது 7 நபர்கள் தாக்கியதாக கூறியுள்ளார் என்றால் சரிதான். பஸ்சில் பயணம் செய்த பயனிகளிடம் விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேனா என்றால் பதிவு செய்யவில்லை. இந்த வழக்கில் அடையாள அணி வகுப்பு நடத்தவில்லை என்றால் சரிதான். 22.06.2018 அன்று மாலை 4.30 மணிக்கு தகவல் கிடைத்துள்ளதாக புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிகளை 22.06.2018 அன்று மதியம் எதிரிகளை கைது செய்துள்ளார் என்றால் சரியல்ல. நீங்கள் புலன் விசரணை சரிவர செய்யாமல் எதிரிகள் மீது பொய்யான வழக்கை தாக்கல் செய்துள்ளீர் என்றால் சரியல்ல. ஓட்டுநர் அன்றைய தினம் பணியில் இருந்ததற்கான ஆவணததை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. சேதாரம் சான்றிதழ் இந்த வழக்கில் வாங்கவில்லை என்றால் சரிதான்.

Taken to my dictation and corrected by me in open court read over to the witness and admitted by him as correct.

S/d.S.Tasneem
I Additional District & Sessions Judge,
Tiruvallur.